**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்**

**OS. No. 359/2020**

**P.W. நாள் - 24.03.2022**

2022ம் ஆண்டு மார்ச் திங்கள் 24ம் நாள் எட்டிக்கன் என்பவரின் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1973ம் ஆண்டின் 10வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின்படி செல்வி.எஸ்.சங்கீதா, இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் வாங்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | எட்டிக்கன் | தொழில் | : | |
| த/பெயர் | : | ராமசாமி | ஜாதி | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | வயது | : | 60 |
| மாவட்டம் | | | | | |

**முதல் விசாரணை**

நான் தாவாவில் வாதி. நான் தாவாவை எனக்காவும், இதர கடன்தாரர்களுக்காகவும் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் அதன் தொடர்ச்சியான நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவேண்டுமென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாணப்பத்திரிக்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் அதை படித்து பார்த்து கையெழுத்து செய்தேன், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். தாவாாவில் தாக்கல் செய்துள்ள கீழ்கண்ட ஆவணங்களை வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டுகிறேன்.

1) 11.12.2016 – வாதி பெயருக்கு 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த புரோநோட்டு அசல் வா.சா. ஆ.1 ஆகும்.,

2) 29.05.2018 – 1ம் பிரதிவாதியால் 3ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் ரீ நகல் வா.சா.ஆ.2 ஆகும்,

3) 27.08.2018 – வாதி தனது வழக்கறிஞர் மூலம் 1ம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு அலவலக நகல் வா.சா.ஆ.3 ஆகும்,

4) 07.09.2018 – 1ம் பிரதிவாதியின் பதில் அறிவிப்பு சார்வான நகல் வா.சா.ஆ.4 ஆகும்.,

கு. வி இல்லை.